பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(22.01.2025 முதல் 26.01.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 006 (01) PJN/GKMS/2025 தேதி: 21.01.2025

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (16.01.2025 முதல் 20.01.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -26.01.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/01 | 17/01 | 18/01 | 19/01 | 20/01 | | நாள்-1 22/01 | நாள்-2 23/01 | நாள்-3 24/01 | நாள்-4 25/01 | நாள்-5 26/01 |
| 0 | 0 | 0 | 79 | 1.2 | மழை (மி.மீ) | 20 | 18 | 2 | 0 | 0 |
| 32 | 30 | 30 | 30 | 29 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 29 | 29 | 29 | 28 | 28 |
| 24 | 21 | 22 | 22 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 24 | 24 | 24 | 22 | 22 |
| 5 | 5 | 6 | 7 | 6 | மேக மூட்டம் | 6 | 6 | 6 | 3 | 3 |
| 76-82 | 72-91 | 85-86 | 86-95 | 78-95 | ஈரப்பதம் (%) | 84-98 | 84-98 | 84-98 | 80-90 | 80-90 |
| 3 | 5 | 6 | 3 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 12 | 12 | 14 | 12 |
| வட மேற்கு | வடக்கு வட கிழக்கு | வட மேற்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (22.01.2025 முதல் 26.01.2025 வரை):**

ஜனவரி 22 மற்றும் 23 தேதிகளில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி 24 தேதியில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 22-29 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-98 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10-14 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | தூர் கட்டும் பருவம் | வயலில் தேங்கிய மழைநீரை வடியச் செய்ய வேண்டும்.<br>நெற்பயிரில் இடைவெளிகளை நிரப்புவதற்கு அதிக தூர்களிருந்து களைத்து/பிரித்து நடவு செய்யவும். நெற்பயிரில் இடைவெளிகளை நிரப்புவதற்கு அதிக தூர்களிருந்து களைத்து/பிரித்து நடவு செய்யவும்.<br>நெல்லில் இலை வழி ஊட்டம் கொடுத்து ஒரு வாரத்திற்கு பிறகு மேலுரமாக ஹெக்டேருக்கு 50 கிலோ யூரியா மற்றும் 20 கிலோ பொட்டாஷ் உடன் 10 கிலோ வேப்பம் புண்ணாக்கை இடவும்.<br>நெற் பயிரில் இலை சுருட்டுப் புழுக்களை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணிகளை 5cc (ஹெக்டேருக்கு 1,00,000) என்ற அளவில் 37, 44, 54 ஆகிய நாட்களில் வெளியிடலாம்.<br>தழைச்சத்துக்களை தேவையில்லாமல் அளவுக்கு அதிகமாக படுத்துவத்தை தவிர்க்கவேண்டும்.<br>விளக்குப் பொறியை பயன்படுத்தி அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.<br>நடவுவயலில் டி(T) வடிவ குச்சிகளை வைத்து பூச்சிகளை உண்ணும் |

| | | |
|---|---|---|
| | | பறவைகளை பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் அல்லது கார்டேப்ஹைறட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபென்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும்.

**முதல்வர்**